# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

**தமிழ் மொழியும் இலக்கியமும் I,II** | **மூன்று மணித்தியாலம்**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "ஆய்மணிப் பைம்**பூண்** அலங்குதார்க் கோதையை...." என்ற வரியில் "பூண்" என்ற சொல்லின் பொருள்
(1) கழல் (2) ஆடை (3) ஆபரணம் (4) காப்பு

2. '**கொண்டானின்** துன்னிய கேளிர் பிறரில்லை' - இங்கு கொண்டான் என்பதன் பொருள்
(1) கணவன் (2) நண்பன் (3) உறவினன் (4) அயலவன்

3. 'மாணவர்கள் **சுயாதீனமாகச்** செயற்பட்டார்கள்' - சுயாதீனம் என்பதன் எதிர்ச்சொல்
(1) பலவீனம் (2) சுகவீனம் (3) கவனயீனம் (4) பராதீனம்

4. '**அரிது அரிது** மானிடராதல் அரிது' என்பதில் 'அரிது' என்பதன் எதிர்ப்பொருட் சொல்
(1) இலகு (2) எளிது (3) புதிது (4) இனிது

5. '**விதவைகளுக்கு** வாழ்வாதார உதவிப்பணம் வழங்கப்பட்டது.' - விதவை என்பதன் எதிர்ப்பாற் சொல்
(1) கணவன் (2) புனிதன் (3) தபுதாரன் (4) எசமானன்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6 பனையின் இளையது வடலி; கமுகின் இளையது
(1) பிள்ளை (2) குட்டி (3) ஓலை (4) நாற்று

7. தோடம்பழத்தின் உள்ளீடு சுளை; கற்றாளையின் உள்ளீடு
(1) சோறு (2) பருப்பு (3) அரிசி (4) மணி

8. சிலை, தனுசு, சாபம் ஆகிய பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
(1) வில் (2) இராசி (3) விக்கிரகம் (4) அம்பு

9. வெளிப்படையாகப் புகழ்ந்தும் மறைமுகமாக இகழ்ந்தும் பாடுவது
(1) சிலேடை (2) மடக்கு (3) அங்கதம் (4) வசைக்கவி

10. மெமறி (memory) என்பதற்குரிய தமிழ்க் கலைச்சொல்
(1) இறுவட்டு (2) வன்பொருள் (3) மென்பொருள் (4) நினைவகம்

[பக். 2 ஐப் பார்க்க

- **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. 'நாக்கு வளைத்தல்' என்ற மரபுத்தொடரின் பொருள்
(1) அடக்கமின்றிப் பேசுதல் (2) பழித்தல்
(3) வாயில் வந்தபடி பேசுதல் (4) குறை சொல்லுதல்

12. அடிமையாகக் கொள்ளுதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
(1) அடியொற்றுதல் (2) கழுத்தில் கட்டுதல் (3) ஆட்கொள்ளுதல் (4) அடியிடுதல்

13. 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல' என்ற உவமைத் தொடருக்கு ஒப்பான பிறிதோர் தொடர்
(1) கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல
(2) தேடிய பூண்டு காலில் சிக்கினாற் போல
(3) கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலைந்தாற் போல
(4) பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல

14. பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைவது
(1) புத்தம்புதிய (2) நல்லநல்ல (3) ஈடும்இணையும் (4) வெட்டவெளி

15. அவள் நன்றாகப் படித்தாள். சித்தியடையவில்லை. இவ்வாக்கியங்களை இணைக்கப் **பொருத்தமற்ற** இணைப்பிடைச் சொல்
(1) அதனால் (2) என்றாலும் (3) ஆனால் (4) இருப்பினும்

16. பின்வருவனவற்றுள் பாரசீக மொழிச் சொல்லாக அமைவது
(1) சால்வை (2) வத்தாளை (3) துட்டு (4) அட்டிகை

17. ஆலி, ஆழி, ஆளி என்ற சொற்களின் பொருள்கள் முறையே
(1) ஒலி, சிங்கம், கடல் (2) கடல், சிங்கம், ஒலி (3) சிங்கம், கடல், ஒலி (4) ஒலி, கடல், சிங்கம்

18. **அம்மாறு** என்ற சொல்லைப் பயன்படுத்தும் சமூகம்
(1) மலையகச் சமூகம் (2) விவசாய சமூகம் (3) மீனவச் சமூகம் (4) வேட்டுவச் சமூகம்

19. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்
(1) மாலா பாட கமலா ஆடினாள்.
(2) சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாடினார்கள்.
(3) வானங் கறுத்து இடி இடித்து மின்னல் மின்ன மழை பொழிந்தது.
(4) 'சாப்பிட வாருங்கள்' என அம்மா எங்களை அழைத்தார்.

20. கொடைப் பொருளில் அமைந்த வாக்கியம்
(1) மாதவனுடன் கமலன் சென்றான். (2) மரத்திற்கு நீர் ஊற்றினான்.
(3) வடக்கிற்கு இரயில் சென்றது. (4) எனக்கு நன்றாகத் தெரியும்.

21. செயப்பாட்டு வினையாக அமையும் சொல்
(1) எழுதினான் (2) வருத்தினான் (3) காண்பித்தான் (4) வரையப்பட்டது

22. பெயரெச்சத் தொடராக அமைவது
(1) படித்து முடித்தான் (2) மரத்தில் ஏறினான் (3) எழுதிய பேனா (4) ஓடி வருதல்

23. 'நிர்மலமான வானத்தில் பால்போல் நிலவெறித்தது' இவ்வாக்கியத்தில் வந்த உவமானம்
(1) பால் (2) போல் (3) நிலவு (4) வானம்

[பக். 3 ஐப் பார்க்க

24. வன்றொடர் குற்றியலுகரமாக அமைவது
(1) பண்டு (2) மூழ்கு (3) கடுகு (4) நாற்று

25. ‘கடிமனையிற் செறித்து’ என்பதில் ‘கடி’ என்ற உரிச்சொல் உணர்த்தும் பொருள்
(1) வாசனை (2) புதுமை (3) காவல் (4) அச்சம்

26. பொற்றொடி உடைந்தது, பொற்றொடி வந்தாள் என்பனவற்றில் பொற்றொடி என்பது முறையே,
(1) வினைத்தொகை, பண்புத் தொகை
(2) வேற்றுமைத்தொகை, அன்மொழித் தொகை
(3) வேற்றுமைத்தொகை, உவமைத்தொகை
(4) பண்புத்தொகை, அன்மொழித் தொகை

27. பின்வருவனவற்றில் திரிதல் விகாரப் புணர்ச்சியாக அமைவது
(1) பூஞ்சோலை (2) வானவில் (3) நெற்கதிர் (4) கடலலை

28. பின்வருவனவற்றுள் மங்கல வழக்குச் சொல்லாக அமைவது,
(1) அருமந்தபிள்ளை
(2) கொல்லைக்குப் போதல்
(3) புறநகர்
(4) இறைபதம் அடைந்தார்

29. வினைச் சொல்லில் காலங்காட்டும் உறுப்பாக வருவது
(1) இடைநிலை (2) சந்தி (3) விகாரம் (4) சாரியை

30. பின்வருவனவற்றுள் பெயர் + விகுதி + விகுதி சேர்ந்து வரும் ஆக்கப் பெயர்
(1) முதலாளித்துவம்
(2) முயற்சியாளன்
(3) தொழிலாளி
(4) புத்திசாலி

- **பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் மையக் கருத்துக்களைத் தெரிவு செய்க.**

31. கலைகள் பலவாக உள்ளன. அவை மனதிற்கு உற்சாகத்தைத் தந்து உணர்வுகளைச் செம்மைப்படுத்துகின்றன. கலையினால் ஒருவன் நிலையான இன்பத்தைப் பெறலாம். எனவே, கலைகளைப் பேணிப் பயன் பெறுவோம்.
(1) கலைகள் பலவாக உள்ளன.
(2) கலைகளைப் பேணுவதன் மூலம் நிறைந்த பயனைப் பெறலாம்.
(3) உணர்வைச் செம்மைப்படுத்தி இன்பத்தைத் தரும் கலைகளைப் பேணுவோம்.
(4) கலைகள் உற்சாகத்தைத் தருகின்றன.

32. சங்கப் பாடல்கள் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த மக்களின் வாழ்வினை மிகச் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. தெவிட்டாத தீங்கனிகளாக உள்ள சங்கச் செய்யுள்கள் காலத்தால் நிலைத்துள்ளன.
(1) இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பவை சங்கச் செய்யுள்கள்.
(2) காலத்தால் அழியாத சங்கப் பாடல்கள் இயற்கையோடு இணைந்த மக்கள் வாழ்வைக் காட்டுகின்றன.
(3) சங்க காலத்தில் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர்.
(4) சங்கச் செய்யுள்கள் காலத்தால் நிலைத்துள்ளன.

33. பொருள் மயக்கமற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) ரவி அவன் இதைச் செய்யவில்லை என்றான்.
(2) பாடும்போது என்னைக் கண்டு விட்டான்.
(3) நீ இப்படிச் செய்வாய் என்று நான் நினைக்கவில்லை.
(4) எங்கள் வீட்டுக்குப் போவோம் என சுதன் கூறினான்.

[பக். 4 ஐப் பார்க்க

- **பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

34. எல்லோரும் கூட்டத்திற்கு வந்திருந்தபோதிலும், அவன் மட்டும்
(1) வருகிறான் (2) வரமாட்டான் (3) வருவான் (4) வரவில்லை

35. நீ என் வார்த்தையைக் கேட்டிருந்தால், இவ்வளவு துன்பமும்
(1) வரவில்லை (2) வருகிறது (3) வந்திருக்காது (4) வந்ததில்லை

36. எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) செய்நன்றியை ஒருபோதும் மறக்கக் கூடாது.
(2) பயிற்செய்கையும் விலங்கு வேளாண்மையும் இணைந்ததே விவசாயமாகும்.
(3) சென்றொழிந்த காலம் திரும்பிவர மாட்டாது.
(4) முயர்ச்சி இல்லையேல் உயர்ச்சி இல்லை.

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

37. தமக்குரிய வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற தொழிலாளரின் நீண்டகால .......................... நிறைவேற்றப்பட்டது.
(1) உடன்பாடு (2) கோரிக்கை (3) விமர்சனம் (4) அச்சுறுத்தல்

38. வேலைக்குச் செல்லும் அவசரத்தில் ராகவன் பத்திரிகையை ................................. வாசித்தான்.
(1) ஆணித்தரமாக (2) மேலோட்டமாக (3) சுவைபட (4) கருத்தூன்றி

39. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணினி நிறுவனம் தனது சேவைகள் பற்றி .......................... செய்தது
(1) விளம்பரம் (2) விமர்சனம் (3) வெளிப்பாடு (4) பிரகடனம்

- கீழே ஒழுங்கின்றி காணப்படும் வாக்கியங்களை கட்டுக்கோப்பான பந்தியாக்க மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குமுறையைத் தெரிவு செய்க.

40. (அ) அமைதி குடிகொண்ட மனம் அவ்வளவு சுலபத்தில் நோய்வாய்ப்பட்டுவிடாது.
(ஆ) நேர்மை, நாணயம் என்பன இவ்வாறு வழங்கப்படக் கூடிய குறிப்பிடத்தக்க பண்புகளாகும்.
(இ) சில பண்புகளைக் குழந்தைப் பருவத்திலேயே குழந்தைகளுக்கு ஊட்டுவதன் மூலம் பிற்காலத்தில் அவர்கள் மனநோய்க்குள்ளாகாது தடுக்கலாம்.
(ஈ) மனதில் சஞ்சலம் இல்லாதபோது அங்கே நிம்மதியும், சலனமற்ற நிலையும் இயல்பாகத் தோன்றும்.
(உ) இந்த பண்புகள் குடிகொண்ட மனதில் காரணமற்ற வீண் சஞ்சலத்துக்கு இடமிருக்காது.

(1) அ, இ, உ, ஆ, ஈ (2) உ, ஆ, அ, இ, ஈ
(3) இ, உ, ஆ, ஈ, அ (4) இ, ஆ, உ, ஈ, அ

* *

[பக். 5 ஐப் பார்க்க

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
"கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினும்"

(ii) பின்வருவனவற்றுள் பந்தி ஒன்றை அமைக்கும்போது தவிர்க்கப்பட வேண்டியவைகளை இனங்கண்டு எழுதுக.
* விளக்கம்கூறி விரித்தல்
* மிகைபடக் கூறல்
* நியாயங்கூறி விரித்தல்
* முன்னுக்குப்பின் முரணாகக் கூறல்

(iii) **வரை** என்னும் சொல் பெயராகவும், வினையாகவும் அமையக்கூடிய வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைக்குக.

(iv) பின்வரும் தனி வாக்கியங்களை இணைத்து தொடர் வாக்கியமாக்குக.
* கிளர்ச்சிக்காரர் கிரெம்ளின் நோக்கி அணிவகுத்துச் சென்றார்கள்.
* அவர்கள் சிவப்புநிறச் சட்டை அணிந்திருந்தார்கள்

(v) 'ஆசிரியர் கவிதையை வாசித்தார்' இவ்வாக்கியத்தை பிறவினை வாக்கியமாக எழுதுக.

(vi) பொருளமைவுக்கேற்ப ஒழுங்குபடுத்தி எழுதுக.
பேருந்து வண்டிக்காகக் / கையில் கொடுத்ததை / நான் / வாங்கிக் கொண்டு / காத்து நின்றேன்.

(vii) கீறிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து வாக்கியத்தைப் பூரணப்படுதுக.
........................ (அரை, அறை) வயிற்றுக் கஞ்சிக்கும்..................... (வலி, வளி, வழி) யின்றியலைந்தான்.

(viii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை நீக்கி எழுதுக.
இங்கு காணப்படுவதெல்லாம் எனக்குரியவை ஆகும்.

(ix) பின்வருவனவற்றுள் வினையும் பெயருமாக இணைந்த கூட்டுப் பெயர்களைத் தெரிந்து எழுதுக.
(அ) எழுதுகருவி
(ஆ) தலைமுடி
(இ) கூட்டுறவு
(ஈ) கண்காட்சி

(x) "எனக்குக் காது குத்தப் பாக்கிறியளே! எனக்கு என்னா வயசிருக்கும்? சொல்லுங்க பாப்பம்." இத்தொடரினை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக. (20 புள்ளிகள்)

[ பக். 6 ஐப் பார்க்க

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிந்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) இன்று ஒவ்வொருவருக்கும் சுயகட்டுப்பாடு என்பது அவசியமானதொன்றாகக் கருதப்படுகிறது. சுயகட்டுப்பாட்டுடன் வளரும் பிள்ளையொன்றினாலேயே எந்தவொரு சூழலிலும் தன்னை நிலை நிறுத்தி வாழ முடியும். பிறரின் கட்டுப்பாட்டில் வளரும் பிள்ளையானது அக்கட்டுப்பாட்டை எப்போது மீறலாம் என்றே எண்ணும். எனவே சுயகட்டுப்பாட்டுடன் வளர ஒவ்வொரு பிள்ளையையும் வழிப்படுத்த வேண்டும் என்னும் கருத்தினை வலியுறுத்தி **விளக்கக் கட்டுரை** ஒன்று எழுதுக.

(ஆ) புவியின் அமைப்புக்கு ஏற்ப, புவியின் மேற்பரப்பானது முக்காற் பங்கு நீராலும் காற் பங்கு நிலப்பரப்பாலும் ஆனது. இவ்வாறு கிடைக்கக் கூடிய நிலப்பரப்பில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற பகுதி மிகக் குறைவாகும். ஆனால் மனிதன் வாழ்வதற்குரிய மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகூட இன்று பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றது. விவசாய நடவடிக்கைகளின் போது இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதால் மண்ணின் இயற்கைத் தன்மை கெடுகிறது. தொழிற்சாலைக் கழிவுகள், குப்பை கூழங்கள் நிலத்தில் புதைக்கப்படல், காடழிப்பு, மண் அகழ்வு, சுரங்க அகழ்வுகள் என்பவற்றால் நிலம் தன் இயல்பை இழந்து வருகின்றது. நிலத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை வலியுறுத்தி மாணவர் மன்றத்தில் நீங்கள் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

(இ) அறிவியல் சார்ந்த நிலையில் இன்றைய உலகம் பல்வழிப்பட்ட நிலைகளில் உயர்ச்சி அடைந்தபோதும் மானிட நேயத்தைச் சிறப்பாகப் பேண முடியவில்லை. இந்நிலையில் அறிவியல் சார்ந்த ஒருவருக்கும், ஆன்மிகம் சார்ந்த மற்றொருவருக்கும் இடையில் நடைபெறும் ஓர் **உரையாடல்.**

(ஈ) நாதன் பட்டப்படிப்பை முடித்துவிட்டு பிரத்தியேக கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தான். அரசாங்கத் தொழில் எதுவும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக அற்ப சம்பளத்தில் வாழ முடியாது என முடிவுசெய்து கொண்டு தாமிருந்த ஒரே ஒரு காணித்துண்டை ஈடுவைத்து வெளிநாடு செல்கின்றான். ஆனால் அவன் நினைத்தது வேறு, நடந்தது வேறு. இதனைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்த ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் **சுருக்கத்தை 40-45** சொற்களில் உமது வசன நடையில் எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

மொழி மனிதனுடைய உடலில் ஊறாததாக இருக்கலாம். ஆனால் அவனுடைய மூளையை உருவாக்கியது அதுவே. அவன் எண்ணும் எண்ணம், பேச்சு, எழுத்து மூன்றிலும் மொழி உள்ளது. அதன் செல்வாக்கு உள்ளது. மொழி வேறுபாடு குழந்தையின் தொட்டிலிலேயே தொடங்குவது, மரணப்படுக்கை வரை தொடர்ந்து வருவது, இடையில் மனிதன் கற்ற எத்தனையோ பழக்க வழக்கங்கள் மாறிவிடுகின்றன. ஆனால் மொழியின் செல்வாக்கு மாறுவதில்லை. பரம்பரையாக ஆசிரியத் தொழிலில் இருந்தவன் துப்பாக்கி ஏந்தும் தொழிலுக்குச் செல்கின்றான். செருப்புத் தொழில் செய்தவன் நாட்டை ஆளுகின்றான். பரம்பரையாகத் தராசு பிடித்தவன் விமானம் ஓட்டுகின்றான். பரம்பரையாக ஏர் ஓட்டியவன் நூல் எழுதுகின்றான். ஆனால் மொழி மாறுவதில்லை. பரம்பரையாகக் குடித்து மயங்கிப் புலால் மணம் கமழ்ந்த குடும்பத்தில் பிறந்த பெனாட்ஷா குடியை அறவே வெறுத்து மரக்கறி உண்டு வாழ்ந்து வந்தார். வழி வழியாக வைதிகமாக இருந்த குடும்பத்துப் பண்டிதர் நேரு, இருபதாம் நூற்றாண்டில் புதுப் புதுப் பழக்கங்களில் மூழ்கியிருந்தார். செல்லும் நாடுகளுக்கு ஏற்றபடியெல்லாம் நடையுடைகளை மாற்றியிருந்தார். ஆனால் மொழியின் தொடர்பு அவரை விட்டதா? லண்டன் பாராளுமன்றத்தில் பேசும் போது முதலில் பத்து நிமிடம் தன் தாய்மொழியில் தான் பேசியிருந்தார். தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ? அதேவேளை அவர்களை விடத் தாய்மொழியிற் பற்று கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர்களை விட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்க வேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னால் சொல்கிறவர்களின் மூளையில் நஞ்சு கலந்து கிடக்கிறது என்றே கொள்ளல் வேண்டும்.

(10 புள்ளிகள்)

[ பக். 7 ஐப் பார்க்க

**4.** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.

ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றிவிட்டான்
ஆகா! இவ்வுலகமெலாம் அழகின் சோதி!
சீதமிகும் சோலையினில் தென்றல் வீசும்
செம்மலர்கள் முகம்திறந்தே தேனைச் சிந்தும்
மோதி விழும் வண்டுகளும் முழங்கும் பண்ணை
மூக்கினிலே மகரந்த வாசம் வீசும்
கீதமெல்லாம் குயிலுக்கே கிளிகள் பேசும்
கிளையிடையே தாவுகின்ற கதிரைக் கண்டே

(i) இப்பாடலில் சித்திரித்துக் காட்டப்படும் காட்சி யாது?

(ii) இக்காட்சியின்போது இடம்பெறுவனவாகக் கவிஞர் காட்டியிருக்கும் தொடர்ச்சியான இயற்கை நிகழ்வுகளுள் **இரண்டினை** எழுதுக.

(iii) கீதமெல்லாம் குயிலுக்கே கிளிகள் பேசும்
கிளையிடையே தாவுகின்ற கதிரைக் கண்டே...
என்ற கவிதைவரி மூலம் எடுத்துக்காட்டப்படும் சிறப்பினைக் குறிப்பிடுக.

(iv) வண்டுகள் பண்ணிசைப்பதற்கான காரணம் என்ன?

(v) பின்வரும் சொற்கள் தரும் பொருளை எழுதுக.
(அ) சீதம் (ஆ) கீதம்

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5.** உமது பாடசாலை மாணவர் மன்றத்தின் சார்பாக இடம்பெறவிருக்கின்ற **பாடசாலைச் சுற்றுப்புறச் சூழலை அழகுபடுத்துதல்** தொடர்பாக

* அலங்கரிப்பு முறைகள்/ வடிவமைப்பு
  நிழல் மரங்கள், கனி மரங்கள்
  மூடுபயிர்கள் வளர்த்தல்
  பூங்கன்றுகள் நாட்டல்

* மாணவர்களின் குழுநிலைச் செயற்பாடுகள்

போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அதிபருக்குச் சமர்ப்பிக்கும் வகையில் நூறு சொற்கள் அளவில் அறிக்கை ஒன்று எழுதுக.

**அல்லது**

நகரப் பகுதியில் உள்ள பாடசாலையின் விடுதியில் தங்கிக் கல்வி கற்கும் உமது தம்பிக்கு, போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் பற்றி பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய நிலையில் நூறு சொற்கள் அளவில் **கடிதம்** ஒன்று எழுதுக.

(i) நகரப்பகுதிகளில் போதைப்பொருள் பாவனைகளின் பெருக்கம்.

(ii) போதைப்பொருள் பாவனைகளால் ஏற்படும் உடல், உளரீதியான கேடுகள்.

(iii) தன்னை, தான் பாதுகாத்துக்கொள்வதின் அவசியம்.

(iv) ஒழுக்கமுள்ள நிலையில் கல்வியால் உண்டாகும் நன்மைகள்.

(15 புள்ளிகள்)

* * *

# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க :** அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** ஆம் வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) ‘நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத்தற்று’
மேற்படி குறட்பாவின் பொருளை எழுதுக.

(ii) “மக்களின் ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை
ஈன்றாளோ டெண்ணக் கடவுளு மில்” -
இப்பாடலடிகளில் குறிப்பிடப்படும் இரண்டு நீதிக்கருத்துக்களும் எவை?

(iii) “செங்கற்பட்டில் பல் தேய்த்துக்கொண்டு காப்பி சாப்பிடுவோமா?” - இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?

(iv) “வையக மெல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலை வேல்மாறன் களிறு”
(அ) மாறன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) மாறனின் சிறப்பொன்றினைக் குறிப்பிடுக.

(v) “கத்தி என்ன மின்னுறது உன்
கவ்வாத் தென்ன பிந்துறது? ”
என்ற தொழிற்பாடலில் கவ்வாத்துப் பிந்துவதற்கான காரணம் யாது?

(vi) “தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாய் ....”
(அ) இப்பாடல் வரிகள் இடம்பெறும் நூல் எது?
(ஆ) தம்பி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(vii) “மஞ்சுமஞ் சுங்கைப் பரராசசேகர மன்னன்வெற்பில்....” -
(அ) இங்கு பரராசசேகர மன்னனின் எச்சிறப்பு எடுத்துரைக்கப்படுகின்றது?
(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(viii) ‘ஒரு பதிவிரதையின் சரித்திரம்’ என்ற கதையை அடிப்படையாகக் கொண்டு ‘பதிவிரதை’ என்பதன் பொருளை எழுதுக.

(ix) “உனக்கு என்ன ஆனாலும், நீ வாதாடியதில் நியாயம் மட்டுமல்ல, ஒரு தேவையும் இருந்தது...”
இங்கு தர்மலிங்கம் எண்ணியபடி,
(அ) நியாயமாக இருந்தது எது?
(ஆ) தேவையாக இருந்தது எது?

(x) ‘.....உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப் பொருள் தேடி உழல்கின்றார்’ என்ற இவ் அடிகளில் உள்ளத்துப் பொருள் - புறம்பான பொருள் இவ்விரண்டுக்குமிடையே நீர் காணும் வேறுபாடு யாது?

(20 புள்ளிகள்)

[பக் 2 ஐப் பார்க்க

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) **மல்லல் மறுகில் மடநா குடனாகச்**
**செல்லும் மழவிடைபோற்** செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்

**(ஆ)** கோட்டை இடித்தகழ் குன்றாக்கிக்
குன்றகழ் ஆக்கித்**தெவ்வர்**
**நாட்டை மிதிக்கும் கடாக்களிற்**
**றான்**நந்தி நாட்டினில்பொன்
தோட்டை மிதித்தந்தத் தோட்டுடு
பாய்ந்து சுருள்அளகக்
காட்டை மிதிக்கும் கயற்கண்ணி
யோசுரம் கால்வைப்பதே

(இ) கதிரவன் வெம்மையைத் தடுப்பதற்கு ஓங்கிய பாசிலைப் பந்தர் வேய்ந்தாற் போன்று விளங்கிய மரத்தின் நிழலில் இருவரும் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்கள். சில நாழிகை சென்ற பின்னர், தோழன் துயிலொழிந்து எழுந்தான். எங்கும் பசுமை நிறமும், பறவையின் ஒலியும், பழத்தின் மணமும் நிறைந்திருப்பினும் பசியின் கொடுமையைப் பொறுக்கலாற்றாது வருந்தினான். **கற்பகத்தருவெனக் கவின்பெற விளங்கிய மரக்கொம்புகளை நயந்து நோக்கினான்.**

(ஈ) பெற்றோர்களைச் சந்தோஷிப்பிக்க என்னால் இயன்ற மட்டும் பிரயாசைப்படுகிறேன். யான் உம்முடைய யோக வித்தையைக் கற்றிலேன். ஒரு நாளும் சந்நியாசி வேஷம் தரித்திலேன். நாட்டை நீங்கிக் காட்டிலும் புகுந்திலேன். ஆயினும் **நான் அறிந்தது ஆசையை அறவே வெறுத்து, என்தொழிலைப் பழுதுறாமல் செய்து வருவதனால் உண்டாகியதாம்.**

(20 புள்ளிகள்)

**3.** **'கவிச்சக்கரவர்த்தி'** நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) கம்பரின் இலக்கிய முயற்சிகள் யாவை?

(ஆ) குமாரப்புலவரின் தற்பெருமை புலப்படும் சந்தர்ப்பம் ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(இ) குலோத்துங்க சோழனின் கூற்றுக்கள் மூலம் வெளிப்படும் இராமாயணத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறுக.

**அல்லது**

**'நக்ஷத்திரக் குழந்தைகள்'** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நக்ஷத்திரம் தோன்றுதல், விழுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் குழந்தை ரோஹிணியின் உள்ளத்தில் எழுந்த இரு வேறுபட்ட உணர்வுகள்.

(ஆ) ரோஹிணியின் தந்தை சோமசுந்தரம் என்ற கதாபாத்திரச் சித்திரிப்பு.

(இ) கதாசிரியரின் மொழிநடை.

(15 புள்ளிகள்)

*[பக் 3 ஐப் பார்க்க*

**4.** (அ) ‘வெட்டனவை மெத்தனவை......’

(ஆ) ‘செறியு மரண்மிகு படைகளுடைய....’

(இ) ‘மானங்குலங் கல்வி ....’

ஆகிய பாடல்களில் முறையே இன்சொல்லின் பயன், ஒற்றுமையின் உயர்வு, பசிக்கொடுமை என்பன வலியுறுத்தப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

**நிழலின் நினைவு** என்ற கவிதையில்

(அ) வேம்பின் நிழல் மறந்த மண்முழுதும்
நாளை நிழல் இறைக்கும்
என்மேல் இல்லாவிடின்
என் பிள்ளைகள்மேல்
நிச்சயமாய்
என் பேரர்கள்மேல்

என்ற அடிகளினூடாக, கவிஞர் கூற விழையும் செய்தி.

(ஆ) கவிஞர் நினைவில் எழுந்த இனிய உணர்வுகள்

(இ) கருத்தை விளக்கக் கையாண்ட உத்திகள்

என்பன பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5, 6, 7** ஆம் வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவு செய்து எழுதுக.

**5.** **“புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே”** என்ற மீனவர் பாடலை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) இப்பாடல் பாடப்படுவதன் நோக்கம் யாது?

(ஆ) தொழில் பற்றிய ஆர்வம், நம்பிக்கை, பெருமிதம், ஆகியன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

**6.** ‘**பாரதியார் கவிநயம்**’ என்ற கட்டுரையில்

(அ) குழலிசையின் இனிமை

(அ) குழந்தையின்பம்

(ஆ) காதற் பிரிவு

பற்றிய பாடல்கள் தொடர்பாகப் பாரதியாரின் கவித்திறன் விதந்து கூறப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

**7.** ‘**மங்கையர்க்கரசியின் காதல்**’ சிறுகதையில்

(அ) கருணாகரனின் வீரம்

(ஆ) கருணாகரன் மீது மங்கையர்க்கரசி கொண்ட காதல்

ஆகியன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

* * *